**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா. 24**
**Defence**
**Court**

Name : பூமாரி என்ற முருகன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 08.04.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில், மேலப்பூலியூர், சிதம்பரம் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். இறந்து போன குமார் பாண்டியன் என்பவரை தெரியாது. அவரது சகோதரர்களையும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் லாரி டிரைவராக திருநெல்வேலியில் தங்கியிருந்து வேலை பார்த்தேன். நான் வசிக்கும் தென்காசி பகுதியில்

பிரச்சனையாக இருந்தது என்னை போலீசார் தேடி வந்தனர். இஸ்லாமியர்களுக்கும், இந்துக்களுக்கும் பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். என்னை போலீசார் தேடியதால் காவல் நிலையத்தில் சரணடைந்தேன். என்னை குமார்பாண்டியன் பிரிவினர்களில் சேர்த்து வழக்கு போட்டு விட்டார்கள். 2007ம் ஆண்டு நான் அவ்வாறு சரணடைந்தேன். எனக்கு இஸ்லாமியர்களுக்கும், இந்துக்களுக்கும் நடந்த பிரச்சனை பற்றி தெரியாது. பிரபு என் நண்பர், தட்சிணாமூர்த்தையும், சுரேசையும் தெரியாது. தட்சிணாமூர்த்தி என் மீதான வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார். நான் இவ்வழக்கில் பின்பும் தட்சிணாமூர்த்தி யார் என்று தெரிந்து கொள்ளவில்லை. செந்தில், சேகர் வெட்டி கொலைசெய்யப்பட்ட விவரம் தெரிந்து கொண்டேன். எதனால் இறந்தார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். .

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது நான் இந்து முன்னனி தலைவர் குமார்பாண்டியன் என்பவரை தெரியும் என்றும் நானும் இந்து முன்னனி இயக்கத்தில் ஈடுபாடு உண்டு என்றும், முன்விரோதம் காரணமாக குமார்பாண்டியனை 17.12.2006 அன்று முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்த சிலர் கொலை செய்து விட்டார்கள் என்றும் அதனால் குமார்பாண்டியன் தரப்பினருக்கும், முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவர்களுக்கும் முன்விரோதம் ஏற்பட்டது என்றும் முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்த மைதீன்

என்பவரை கொலை செய்ய முயன்ற வழக்கில் குமார்பாண்டியன் சகோதரர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றும், இதனால் முன்விரோதம் இருந்தது என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. 14.08.2007 அன்று காலை நானும் எனது நண்பர் பிரபு சுரேஷ், தட்சிணாமூர்த்தி ஆகியோர் கூளக்கடை பஜார் எல்.ஆர்.எஸ் பாளையம் ஜங்சனில் நின்று கொண்டிருந்தபோது காலை சமார் 10.15 மணிக்கு ஹனிபா, அப்துல்லா மற்றும் அவரது கூட்டாளிகள் யாசர் அரபாத், இஸ்மாயில், திவான் என்ற கதிரவன், சேக், அபுகோரா ஆகியோர் ஆட்டோக்களில் கிழக்கு பார்த்து சென்றார்கள் என்றும், ஹனிபாவும் அப்துல்லாவும் **TN**72 **X** 0588 என்ற மோட்டார் சைக்கிளில் சென்றனர் என்றும், அலாவூதின் மோட்டார் சைக்கிளை ஓட்டினார் என்றும், மேற்படி அலாவூதின் சக்திபாண்டியன் ஓட்டி வந்த அம்பாசிட்டார் காரில் மோதி அவர்களை வழி மறித்தார்கள் என்றும், சக்திபாண்டியனும் அவருடன் வந்திருந்தவர்களும் காரை விட்டு இறங்கி ஓடியபோது, அவர்களை சிலர் வழிமறித்ததால் மீண்டும் மேற்கு நோக்கி ஓடினார்கள் என்றும், அவர்களை ஹனிபா, அப்துல்லா, பசீர், அபு அயுப், அன்சாரி, மீரான் மைதீன், நவாஸ் மற்றும் சிலர் ஆயுதங்களுடன் வழி மறித்து வெட்டியும் குத்தியும் தாக்குதல் நடத்தினார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. அப்போது சம்பவத்தை நானும் தட்சிணாமூர்த்தியும் பார்த்தோம் என்றும், செந்திலை அலாவூதின் அருவாளால் வெட்டியும், நாவஸ் வயிற்றில் வலது பகுதியில் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றும், சேகரை ஹனிபா மற்றும் அப்துல்லா அருவாளால் வெட்டினார் என்றும், அசன்கனி கத்தியால் குத்தினார் என்றும், சுரேசை பசீர் அருவாளால் வெட்டியும், சையது அலி

பட்டாக்கத்தியால் வெட்டினார் என்றும் நானும் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்த நானும் தட்சிணாமூர்த்தியும் சம்பவத்தை பார்த்து பயந்து ஓடிவிட்டோம் என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகள் சாட்சியாக உள்ள மற்றொரு வழக்கில் நான் எதிரி என்றால், சரிதான். அதனால் எங்களுக்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி நான் நேரில் பார்த்த சம்பவத்தை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**